# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60. தொலைபேசி : 23411. நிறுவியது: 1947.

வளளுவர் ஆண்டு 2007 சித்திரை—27, ஐ.அவ்வல்—8 (9-5 76) ஞாயிறு புத்தகம் 30, இதழ் 5


## தமிழர் கூட்டணி மாநாட்டில் 50 000க்கு மேற்பட்ட மக்கள் பங்குபற்றுவர்!

### ஏற்பாடுகளில் வரவேற்புக் குழு தீவிரம்!

இவ்வார இறுதியில் (மே 14, 15) வட்டுக்கோட்டைத்தொகுதியில் நடைபெறும் தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில், நாட்டின் நாலு திசைகளிலுமிருந்து சுமார் 50,000க்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் கலந்து கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுபடுகிறது. மாநாட்டுககான இறுதியேற்பாடுகளை கவனிப்பதில் மாநாட்டு வரவேற்புக்குழுவினர், செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

தமிழர் கூட்டணியின் வரலாற்றில் முக்கிய திருப்பங்களையும் தமிழ்பேசும் மக்களுக்கு எழுச்சியையும் ஏற்படுத்தவிருக்கும் இந்த மாநாட்டுக்கு வேண்டிய ஒத்துழைப்பும் உதவியும் பொது மக்களிடமிருந்து தாராளமாகக்கிடைத்து வருகின்றன. மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு உணவு வழங்குவதற்கென தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் விவசாயிகள், அரிசியும் காய்கறியும் மற்றும் உணவுப் பொருட்களையும் அந்தந்தத் தொகுதி பா. உ.க்களிடம் கையளித்து வருகின்றனர். மாநாட்டுக்கு நிதி வழங்குவதிலும் வர்த்தகர்களும் அரசாங்க ஊழியர்களும் பொதுமக்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மாநாட்டு வரவேற்பு ஏற்பாடுகளை கவனிப்பதில் சட்டத்தரணி எஸ். சங்கரப்

—8-ம் பக்கம் பார்க்க

### மாநாட்டுத் தொண்டர்படையில் சேரவிரும்புவோர் கவனத்துக்கு...!

வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின்தேசிய மாநாட்டின் போது தொண்டர்களாக பணியாற்ற விரும்பும் இளைஞர்கள், உடனடியாக ச. இராசலிங்கம், மே/பா. அ. அமிர்தலிங்கம் செயலாளர் நாயகம் தமிழர் கூட்டணி, மூளாய், சுழிபுரம், எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### ஆபீஸ் பையன் சொல்கிறுன்!

"நம்மட கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா தமிழர் அடக்கியாளப்பட்டால் தமது கட்சி அதனை எதிர்த்துப்போராடும் என்று யாழ்ப்பாணத்தில் போய் நின்று வீராப்பு பேசியிருக்கிறுர். இவர் தமிழருக்காகப் போராடுவது கிடக்கட்டும்; மொஸ்கோவுக்கு போறதுக்கு 'எக்சிட்' பெர்மிட் தரமாட்டன் என்று முகத்திலறைந்தது போல சிறிமா அம்மையார்இவருக்குகூறிய போது அதைஎதிர்த்துப்போராட தெம்புத் திராணியுமின்றிவாயை மூடிக்கொண்டு சுருண்டு போய்க் கிடந்த இவரா தமிழருக்காகப் போராடப்போகிறுர். 1972 ஏப்ரலில் நடந்த இந்த அவமானச் சம்பவத்தை தமிழன் அதுக்குள்ளே மறந்திட்டான் என்று நினைச்சிட்டார் போலே வயதுபோன இந்த டாக்டர்?"

## "ஈழத்தமிழனின் தன்மானத்தை விற்றுவிட நாம் தயாரில்லை!"

### 'பேச்சுவார்த்தை' பற்றிப் பேசுவோருக்கு தந்தை செல்வாவின் ஆணித்தரமான பதில்!

தமிழ் மக்களின் பிரச்சினைகளை 'பேச்சுவார்த்தை' மூலம் தீர்க்க வேண்டும் என்று கூறுவோருக்கு அராலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தந்தை செல்வா அவர்கள் ஆணித்தரமாகப் பதிலளித்தார்.

"இன்று 'பேச்சுவார்த்தை' மூலம் பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று பேசுகிறவர்கள் கடந்த கால அரசியல் வரலாற்றை மறந்துபோய் விட்டார்கள். கடந்த காலங்களில் நமது பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்து விடலாம் என்ற நம்பிக்கையின் பேரில்தான் இரண்டு பிரதான சிங்கள அரசியற் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திறேம்; எழுத்து மூலமான ஒப்பந்தம் செய்து பார்த்தோம் ஆனுல் சிங்களப் பொது மக்கள் அவற்றை ஏற்க மறுத்து விட்டதன் மூலம், தமிழ் மக்களை வெளியே தள்ளி விட்டு விட்டார்கள். இதை நாம் ஒருபோதும் மறந்து விட மாட்டோம். எனவே தான் பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்று கூறிக்கொண்டு

—4-ம் பக்கம் பார்க்க



### யாழ் வளாகத்தில் உதயசூரியன்!

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ் வளாகத்திலும் உதயசூரியன் புகுந்துகொண்டு விட்டான்! ஆம், மேற்படி வளாக தமிழ் மன்றத்தின் இலச்சினையில் பண்டைத் தமிழ் மூவேந்தர்களின் சின்னமான வில், புலி, மீனும், யாழ்ப்பாண மாநகரத்தின் சின்னமான யாழும், உதயசூரியனும் இடம் பெற்றிருக்கின்றன.

### சண்டித்தனம் புரிந்த கட்சி அமைப்பாளருக்கு பாடம் புகட்டினர் வவுனியா மக்கள்


பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை கொழும்பில் நடைபெற்ற ஆளுங்கட்சியின் மே தின ஊர்வலத்தில் பங்குபற்றச் செய்வதற்காக வடபகுதியிலிருந்து பெருந்தொகையில் வலுக்கட்டாயமாக ஏற்றிச் சென்ற அமைப்பாளர் ஒருவர், வவுனியாவில் உணவு விடுதி ஒன்றில் புகுந்து சண்டித்தனம செய்து அங்குள்ள மானத் தமிழ் இளைஞர்களிடம்வகையாகவாங்கிக்கட்டினுராம் மே முதல் நாளிரவு நடைபெற்ற இந்தக் காடைத்தனத்தின் போது பொலிசாரும தலையிட்டதாகவும், சண்டித்தனத்திலீடுபட்ட அமைப்பாளரையும்,

—5-ம் பக்கம் பார்க்க

## போனமச்சான் திரும்பிவந்தார் வட்டுக்கோட்டைக்கு!

அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தத்தொகுதியை தேர்ந்தெடுப்பது என்று தெரியாமல் தடுமாறித்திரியும் ஓர் திடீர் அரசியல் வாதி, பழைய முருங்கை மரத்திலேயே ஏறப்போகிறுராம். வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து, பருத்தித்துறை, கிளிநொச்சி, வவுனியா, மன்னுர் என்று தொகுதிதேடி யாத்திரை செய்து அங்கெல்லாம் மக்களால் விரட்டப்பட்ட இந்த 'திடீர்' அரசியல்வாதி— இப்போது இறுதியாக வட்டுக்கோட்டைத் தொகுதியிலேயே 'கண்' போட்டுள்ளாராம், என்ன இருந்தாலும் பிறந்த ஊர் என்று கொஞ்சவாக்குகளாவது இங்கு கிடைக்காதா என்பதே இவரது நப்பாசையாம்! காரைநகரை வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருந்து நீக்கிவிட்டால் தான்வெல்லலாமென்று இவர் மனப்பால் குடிக்கிறுராம். இந்தச் 'சூரிய' ஒளியை கண்டு இப்போது 'பனி' உருகத்

—4-ம் பக்கம் பார்க்க




## 'சுயநிர்ணய உரிமையை யாரும் மறுக்கமுடியாது!"

—பேராசிரியா ஜனேவிக்

'மனித உரிமைகள்' சாசனம் என்பது ஒரு சர்வதேச சட்டமாகும். ஒவ்வொரு அரசும் பின்பற்ற வேண்டிய ஆகக்குறைந்த நிலை இந்த சாசனத்தில் சொல்லப்பட்டவைதான். மக்களின் சுயநிர்ணய உரிமையும், தங்கள் இயற்கை வளத்தின் மீது மக்களுக்குரிய ஆதிபத்திய உரிமையும் இதில் உள்ளடங்கும். இதிலிருந்துதான் பல்வேறு சுதந்திரங்களும் பிறக்கின்றன. வாழும் உரிமை, சுயதீனம், நடமாடும்உரிமை தாம் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை, சட்டத்தின் முன்னும் நீதிமன்றத்தின் முன்னும் சம உரிமை, சிந்தனை சுதந்திரம், மத சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், வாக்களிக்குப் உரிமை இவையாவும், மக்களின் உரிமைகளாகும்.

—இவ்வாறு யூகோசிலேவிய நாட்டைச் சேர்ந்த பேராசிரியரும், மனித உரிமை சாசனம் பற்றி விசாரிக்க ஐ. நா. சபையினுல் நியமிக்கப்பட்டிருக்கும் ஆணைக்குழு உறுப்பினர்களில் ஒருவருமான பேராசிரியர் ஜனேவிக் கூறியிருக்கிறுர் இவர் இலங்கையில் ஒருமாதம் தங்கியிருப்பார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்



க. இராமசாமி,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ் நாட்டில் திமு கழக அரசு ஆட்சிக்கட்டில் இருந்த காலம் தமிழகத்தின் பொற்காலம் என்று சொல்வது சரியா?

ப: முற்றிலும் சரியானது. தமிழ் நாட்டுக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டப்பட்டதும், ஆதிக்கம் செலுத்திவந்த இந்தி அடித்துவிரட்டப்பட்டு தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை அமுலுக்கு வந்ததும், பூம்புகார் கலைக்கூடமும், வள்ளுவர்கோட்டமும் உருவானதும் கழக அரசில் தான்! ராஜராஜ சோழன் ஆட்சியின் நினைவாக தஞ்சாவூர்ப் பெரிய கோவில் இன்றும் அமைந்திருப்பதுபோல-கருணாநிதிச் "சோழன்" ஆட்சியின் நினைவாககலைக்கோட்டமாகத் திகழும் வள்ளுவர் கோட்டம் நின்று நிலைத்து என்றும் பெருமை பரப்பிக் கொண்டேயிருக்கும்!

கே: கலைஞர் கருணாநிதி இப்போது எப்படி இருக்கிறார்?

ப: என்றும்போல சிரித்தபடி உற்சாகமாகவேயிருக்கிறார். 'முரசொலி'யில் தினசரி எழுதுகிறார். 'கரிகாலனி' கேள்விகளுக்கு பதிலளிக்கிறார். நண்பர்களின் திருமணங்களுக்கு செல்கிறார். கழகத் தலைமையகமான அன்பகத்துக்குசென்று கழகப் பணிகளை கவனிக்கிறார். தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்விஞலும் தர்மம் மறுபடிவெல்லும்என்று நம்புகிறார்!

❀

கேணியடி சிற் ஸ்ரீ ஜீவா,
கொக்குவில் மேற்கு.

கே: யாழ் நகரில் சுவர் ஒன்றில்— அமிர், அடக்கு உன் திமிர்' என்று எழுதியிருக்கின்றது. இதை எழுதியவருக்கு நீர் கூறும் பதில் யாது?

ப: அமிர்தலிங்கம் அவர்களின் வட்டுக்கோட்டைத் தொகுதியை 1970 பொதுத் தேர்தலில் பிடித்துள்ள பனித் 'திமிரை' எதிர்வரும் பொதுத்தேர்தலில் 'அமிர்' அடக்கத்தான் போகிறார்!

கே: உமதுகடமை யாது?

ப: மக்களின் படமையைப் போக்குவது!

பொன். தங்கராஜ்,
மெயின் வீதி,
பசறை.

கே: மலையக இளைஞர்களையும் தமிழ் இளைஞர்பேரவையோடு இணைத்தால் என்ன?

ப: தயார்! தயார்!! தயார்!!! தமிழ் இளைஞர் பேரவையின் கதவுகள்சாதி, மத, பிரதேச பேதமின்றி தமிழ் ஈழம் காணவிரும்பும் தமிழ் இளைஞர்கள் அனைவருக்கும் திறந்திருக்கின்றன,

❀

சிவகுமார் கணபதிப்பிள்ளை,
பனங்காமம்,
நட்டான்கண்டல்,
மாங்குளம்.

கே: குயுக்தியார் அவர்களே தாங்கள் விலாசம் தந்தபடி 18, மேரீஸ் வீதி, கொழும்பு 4 எனும் முகவரிக்கு இலண்டன் முரசுக்கு எழுதினேம் பணம் அனுப்பும்படி பதில் வந்தது. பணத்தை மணியோடரில் அனுப்பி ஒரு வருடமும் ஆறு மாதங்களும் ஆகிவிட்டன ஆனல் இலண்டன் முரசைத் தான் காணும் காரணம் என்ன?

ப: இலண்டன் முரசு இப்போது வெளியிடப்படுவதாகத் தெரியவில்லை. நானே இலண்டன் முரசைக் கடைசியாகப் பார்த்து ஓராண்டுக்கு மேலாகிவிட்டது!

❀

மு. வவானந்தன்
சித்தாண்டி
முறக்கொட்டான்சேனை

கே: எனது கிராமத்தில் சாதி என்னும் நச்சுப்பாம்பு உலாவுகிறது இதை ஒழிக்க ஒரு வழி கூறுங்கள்?

ப: பகுத்தறிவு எனும் பெரிய தடிகொண்டு அதை அடித்துக்கொல்லுங்கள்!

ம. நாராயணன்,
ஸ்ரீவாசம், முந்தல்;

கே: உண்மையாகவே தமிழர் ஒன்று கூடிவிட்டார்களா?

ப: உண்மைத் தமிழர்கள், தமிழர் கூட்டணியின் கீழ் ஒன்றுபட்டுவருகிறார்கள்!

❀

எஸ். எம். இளங்கோ,
நெசவு நிலையம்,
குருமன்வெளி.

கே: பெண்கள் கெட்டுப் போவதற்கு ஆண்கள்தான் காரணம் என்கிறார்கள் சில பெண்கள். ஆண்கள் கெட்டுப்போவதற்கு பெண்கள் தான் காரணம் என்கிறேன் நான், நீங்கள்...?

ப: ஒருவர் கெடுவதற்கு ஒருபோதும் இன்னொருவர் காரணமாவதில்லை அவரவர் மனமே காரணம்!

❀

ஆர். இராஜசேகரம்
பொத்துவில்-3

கே: நமது தமிழ் தந்தை செல்வா பிரதம மந்திரியாக வந்தால் சிங்களவர்களின் நிலை எப்படியோ...?

ப: அவர்கள் தங்கள் பிரதேசத்தில் தனியாட்சியை நடத்தும் உரிமையை தந்தை செல்வா மறுக்க மாட்டார்!

கே: தமிழரசு ஆட்சிக்கு வந்தால் யாருக்கு முதலில் சாட்டையடி?

ப: காட்டிக்கொடுப்பவர்களுக்கு!

❀

க. ஜெகதீசன்
நயினாதீவு

கே: பண்டா செல்வா ஒப்பந்தத்தில் தமிழருக்குக் கிடைக்க இருந்த உரிமைகளுக்கு எதிராக ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டியாத் திரை எடுத்தார். ஆனல் இப்போது அவர் தமிழர்களுக்கு உதவி செய்பவராக தம்பட்டம் அடிக்கிருரே—அவர் பற்றி தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

ப: அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறவே இந்த முதலைக் கண்ணீர். ஜே. ஆரின் கட்சியும் சரி, அம்மையாரின் கட்சியும் சரி, இரண்டும் தமிழனின் எதிரிகளே!

❀

எம். கோபாலகிருஷ்ணன்,
இல 56 புத்தளம் ரோட்,
குருநாகல்.

கே: தியாகி சிவகுமாரனை எதற்கு தியாகி என்கிறீர்கள் நாங்கள் தியாகிகள் இல்லையா?

ப: இன விடுதலைக்காக தனக்கு சரியென்றுபட்ட வழியிற்சென்று தன்னையே முழுமையாக அதற்கு அர்ப்பணித்ததால் தியாகச் சுடராக சிவகுமாரன் உயர்ந்தோங்கிநிற்கிருன்! தியாகம் புரிந்தால், நீங்களும் தியாகிகளே!

❀

காரை பி. ரி. பாலன்,
காரைநகர்.

கே: குயுக்தியாரே! நமது இலட்சியத்தை வென்றெடுப்பதெனத் துணிந்துவிட்டோம். போராடத் தயக்கமேன்?

ப: நான் தயங்கவில்லையே! என்றும் தயாராகத் தான் இருக்கிறேன்!

❀

எஸ். பத்மநாதன்,
இல: 16/1 பதுளை வீதி,
பண்டாரவளை,'

கே: தமிழ்ஈழம் தவிர்ந்த இலங்கையின் மற்றப் பாகங்களில் வசிக்கும் தமிழர்கள் பொதுத்தேர்தலில் எந்தக் கட்சிக்கு வாக்களிக்கலாம்?

ப: இது ஒருமுக்கியமான கேள்வி. இதுபற்றி தமிழர் கூட்டணி இன்னும முடிவு செய்யவில்லை, ஆனல் தமிழனுடையவாக்கு எந்தவொரு சிங்களக் கட்சிக்கு போவதாலும் எந்தப் பிரயோசனமும் இல்லை. சிங்களக் கட்சிக்கு தமிழன் வாக்களிப்பது தனது குழியை தானே தோண்டுவதுபோலத் தான். சிங்களப் பகுதியிலுள்ள தமிழர்களும் தமிழ் ஈழம் அமைவதையே விரும்பி வரவேற்கிறார்கள் என்பதை அடுத்த பொதுத்தேர்தலில் எப்படியாவது எடுத்துக்காட்ட வேண்டும் என்பதே எனது கருத்து. இதற்கு ஒருவழியை அமைத்துக்கொடுப்பது தமிழர் கூட்டணியின் கடமை!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்,
194 ஏ. பண்டாரநாயகா வீதி.
கொழும்பு-12.

# நாளை மலரும் வாழ்வு

படைகொண்டு முடிகண்டு
அருள்கொண்ட நெறிநின்று
உலகாண்டு வாழ்ந்த தமிழன்
இன்று
முடிவைத்து அடிநக்கி
தொழுபட்டு அவிள்பெற்று
வசையுற்று வாழ்கின்றனன்.

அறுபட்ட உடல்நின்று
இசைகொட்ட எழுந்தாட
புகழ்நின்று வாழ்ந்த தமிழன்
இன்று
அடிஞ்சொல்லி துயில்கொண்டு
மனங்கொன்று உடலோம்பி
உயிரஞ்சி வாழ்கின்றனன்.

முதுகுற்ருல் முலைபோகும்
புயல் என்று படைபுக்கி
எழில்மிஞ்ச வாழ்ந்த தமிழன்
இன்று
பிடிபட்டு உடைவிட்டு
சிதைபட்டு இணைபட்டு
பெயர்கெட்டு வாழ்கின்றனன்.

இசைகொட்டி வரவேற்று
மகிழ்பொங்க விருந்தோம்பி
உயர்வுற்று வாழ்ந்த தமிழன்
இன்று
இருந்தோம்ப இடமின்றி
வகையின்றி வாழ்வின்றி
நெறிகெட்டு அலைகின்றனன்.

கல்வியில் மேலோனாய்
வானகம் தனில் புக்கி
வழிகாட்டி வாழ்ந்த தமிழன்
இன்று
தரப்படுத்தல் தனைக்கொண்டு
தடக்கியே வீழ்த்திவிட
தவித்திட்டு முழிக்கின்றனன்.

திறமையின் முதன்மையால்
அரசிடம் பணிபெற்று
செயல்காட்டி வாழ்ந்த தமிழன்
இன்று
இறைமையின் அடிமைக்கு
இரண்டொன்று கொடுத்தாலும்
எடுபடாது தேய்கின்றனன்.

பசுவொன்று மணிதட்ட
முறைகேட்டு நெறிநின்று
மனுகண்டு வாழ்ந்த தமிழன்
இன்று
சட்டமும் வஞ்சித்து
சமமின்றித் தாழ்வுற்று
நிலைகெட்டுச் சாகின்றனன்.

நிலைகண்டு வெறிகொண்டு
செல்வாவின் வழிநின்று
தமிழீழம் சமைக்காது

இனியும்
ஒரு தமிழன்
சும்மா இருந்தால்
அவனும் துரோகிதான்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு

தங்களின் 28-4-76 திகதிய சுதந்திரனில் தமிழர் கூட்டணியும் 'மே' தினத்தை கொண்டாட ஏற்பாடு செய்வது பற்றி யெழுதியிருந்தீர்கள். அதைப் படித்தபோது, தொழிலாளர்களாகிய நாம் தமிழர் கூட்டணி மீது வைத்திருந்த சந்தேகம் தங்கள் எழுத்து மூலம் முற்ருகத் தீர்ந்தது. முக்கியமாகத் தங்கள் எழுத்துக்களின் மூலம் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஊக்கம் அளித்துவருகிறீர்கள்.

அண்மையில் உடுப்பிட்டி சிவா, ஒரு கருத்தரங்கில் பேசும்போது—ஒரு நாட்டின் பொருவாதாரம் விவசாயிகளினதும் தொழிலாளர்களினதும் கைகளில்தான் தங்கியிருக்கிறதென்றும், தன்னைப்போல வழக்கறிஞர் தொழில் செய்பவர்களின் கையில் அல்லவென்றும் கூறியிருந்தார். உடுப்பிட்டி சிவா, உண்மையாக தமது வாழ்க்கையிலும் சோசலிசத்தை ஓரளவுக்கு கடைப்பிடித்து வருகிறார்.

தமிழர் கூட்டணியினர் தமது பழைய போக்கைக் கைவிட்டு—தங்களின் புரட்சிகர எழுத்துக்களினுல் மேலும் முன்னேறி—தமிழ் ஈழம் கண்டு அதில் எல்லோரும் சமத்துவமாக வாழ வழி காட்டுவார்கள் என்று ஏழைத்தொழிலாளர்களாகிய நாம் எதிர்பார்க்கிறோம்.

—இ. கணபதி
நில அளவைத் தொழிலாளி
பிளாக்வூட் தோட்டம்
அப்புத்தளை

●

அன்புமிகு ஈழத்து அண்ண கோவை மகேசன் அவர்கட்கு—

சுதந்திரன் இதழ்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. ஈழவிடுதலைப்போராட்டத்தின் ஏணியாக சுதந்திரன் மலர்ந்து வருவது பாராட்டுக்குரியது. ஏணியின் படிகளாக தங்களின் அரசியல் மடல்கள் திகழ்கின்றன. அழகுத் தமிழ் நடையில் — உணர்ச்சிக் காவியமாக அரசியல் மடல் திகழ்ந்துவருகிறது. 35இலட்சம் மக்கள் தொகைகொண்ட ஈழத்தமிழகம் விடுதலை பெறுவதற்கு எத்தனை தடைகளும் முட்டுக்கட்டைகளும் இருந்தாலும், அவைகள் யாவும் ஒளியைக் கண்டு இருள் விலகுவதுபோல, விலகும் காலம் அதிக தூரத்திலில்லை.

—எம். நடேசன்
குவின் ஸ்ரீட்,
விக்டோரியா,
மாஹி சீசெல்ஸ்
(Mahe—Sey chelles)
Indian ocean

# தமிழர் பிரச்சினைக்கு 'நிரந்தர தீர்வு' காண பீலிக்ஸ் தந்த திட்டம்!

கூட்டுச்சேரா மாநாடு நெருங்க நெருங்கப் பேச்சு வார்த்தை பற்றிய பேச்சுவார்த்தையும் ஓங்கி ஒலிக்கிறது. பேச்சுவார்த்தையென ஒன்று ஏற்பட்டால் அதன் கதாநாயகனுக திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இருப்பார். எனவே, அவரது நோக்கையும் போக்கையும் தமிழர், குறிப்பாக இளைஞர்கள் அறிந்திருப்பது அவசியம். 10-1-1966, 11-1-1966, 22-4-1965, 26-8-1965 ஆகிய நாட்களில் தமிழர் பிரச்சினை குறித்து அவர் பேசிய பேச்சுக்களின் தொகுப்பு அன்சாட்டிலிருந்து இங்கு தரப்பட்டுள்ளது.

"தமிழரசுக் கட்சியினர் இந்தச் சபைக்கு வந்த காலம் முதலே தமது இலட்சியம் என்ன என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளனர். அவர்களுடைய கோரிக்கை மிகமிக எளியது. அவர்கள் வேண்டுவது இதுதான். நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினரின் (திரு. இ. மு. வி. நாகநாதன்) சொற்களிலேயே கூற விரும்புகிறேன். "தமிழ் நாட்டு மக்கள் தமிழிலே ஆளப்படவேண்டும்; சிங்கள நாட்டு மக்கள் சிங்கள மொழியிலே ஆளப்படவேண்டும்."

"தமிழரசுக்கட்சியின் பிரச்சினை இதுதான்!—

"1956 இல் திருமலையில் நடைபெற்ற எமது தேசிய மகநாட்டில் நிறைவேற்றப்பட்ட நான்கு அம்சத் திட்டம் எம்மிடம் உண்டு. ஒற்றையாட்சி அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்; எமது மொழிக்கும் சம அந்தஸ்து வேண்டும்; தொண்டமானின் ஆட்கள் எல்லோர்க்கும் பிரசாவுரிமை வேண்டும்; எமது மரபுவழித் தாயகத்தில திட்டமிட்டு நிகழ்த்தப்படும் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தவேண்டும்" இதுவே அவர்களுடைய திட்டவட்டமான கோரிக்கை.

## ஒலிவர் ருவிஸ்ற் செல்வா

இதுவே அவர்களுடைய அடிப்படைக் குறிக்கோள். ஆனல் அவர்கள் ஓர் இரகசியத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனல் அவர்கள் ஓர் இரகசியத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது: "ஓர் ஒப்பந்தத்தைச் செய்வதற்காக நாம் எமது நிலையைச் சிறிதளவு தளர்த்தியுள்ளோம். ஆனல் இந்த நாட்டில் தமிழர் சமத்துவத்தோடு வாழ இந்த நான்கு அம்சங்களும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதில் நாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லை" என்று. ஆகவே, காலத்துக்குக் காலம் அவர்கள் சிறிதளவு உரிமைகளைப் பெறத் தற்காலிகமாக விட்டுக் கொடுப்பார்கள். பின்பு மேலும் சில கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகத் தற்காலிகமான சில பின்வாங்கல்களை மேற்கொள்வார்கள். இது சரிப்பட்டு வராது. தொழிலமைச்சரின் (திரு. பிலிப்குணவர்த்தன) மொழியிற் சொல்வதானல் "ஒலிவர் ருவிஸ்ற் பாணியிலே காலத்துக்குக் காலம் முன் வந்தது "மேலும் சிறிதளவு வேண்டும்" என்று கோருவது சரிப்பட்டு வராது.

"தமிழரசுக் கட்சிக்கு வேண்டியது என்ன என்பதை நாடு பூரணமாக அறியும்படி அவர்களே கூறியுள்ளார்கள். அவர்களது தந்திரங்களை மக்கள் அறிவார்கள். எனவேதான் சிங்கள மக்கள் அவர்களுடன் தொடர்பு கொள்வதில் விழிப்பாகவும் ஒதுங்கியும் இருக்கிறார்கள். தமிழரசாரின் இறுதி இலட்சியம் தெளிவானது. அதில் எதை எதையாவது விட்டுக் கொடுக்க அவர்கள் தயாரில்லை. அவர்கள் தற்காலிகமாகச் சில முக்கியமற்ற கோரிக்கைகளை விட்டு விட்டு, குறைந்தளவு உரிமையை ஏற்பதாகத் தோன்றச் செய்வார்கள். ஆனல், அது எல்லாம் தற்காலிகமானதுதான்; விரைவில் விட்டுவிடக்கூடியதுதான். ஆனல், இறுதி இலட்சியத்தை அடைய அவர்கள் முடிவு செய்து விட்டார்கள். (அதனல்) சிங்களவர்களுக்குத் தமிழரசாருடன் தொடர்பு கொள்வதில் இயல்பூக்கமான பயமுண்டு.

## சிங்களத்தை ஏற்றதில்லை

"ரைம்ஸ் ஒவ் சிலோன்" பத்திரிகையில் வெளிவந்த திரு. வி. என். நவரத்தினம் அவர்களின் பேச்சை நான் வாசிக்க விரும்புகிறேன். அவரது பேச்சின் முக்கிய பகுதி இது:—"சில அரசியல்வாதிகள் தமிழரசுக் கட்சி சிங்களத்தை வட, கிழக்கு மாகாணங்களின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்டதாக நிலைநாட்ட முயலுகிறார்கள். ஆனல் நான் உறுதியாகக் கூறுகிறேன், தமிழ் மட்டுமே வட, கிழக்கின் ஆட்சி மொழியாக இருக்க முடியும்" என்றார் அவர். ஊர்காவற்றுறைத் தீவு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை அணுகுமுன் மொழிப் பிரச்சினையை அணுகித் தீர்வுகாண்பதையே அவர் முக்கியமாகக் கருதுகிறார். தண்ணீருக்காகக் காத்திருக்கத் தயார். ஆனல் தைப் பொங்கலுக்கு முன் தமிழ் மட்டும் ஆட்சி மொழியாக வேண்டுமாம்!

## சிறுபான்மை ஆட்சி

சிறுபான்மையோருடைய பிரச்சினை என்ன வென்றால் அவர்கள் பெரும்பான்மையோருடன் சமாதானமாக வாழ விரும்பவில்லை. அவர்கள் பெரும்பான்மை மீது சிறுபான்மை ஆட்சியைத் திணிக்க முயல்கிறார்கள் இதனைப் பெரும்பான்மையோர் ஏற்க முடியாது.

"தமிழரசுக் கட்சியினர்" நாங்கள் உங்களை ஆதரித்து மார்க்சியத்தை முறியடிப்போம்; ஜனநாயகத்தைக் காப்போம்" என ஐ. தே. கட்சியினர்க்குக் கூறுவர்; "எம்மை ஆதரித்து, மார்க்சியத்தை ஆதரித்து முதலாளித்துவத்தை முறியடிக்கவும் அவர்கள் தயார். அவர்கள் இலட்சியம் மார்க்சியத்தையோ முதலாளித்துவத்தையோ முறியடிப்பதல்ல, ஜனநாயகத்தைக் காப்பதுமல்ல, அவர்கள் வேண்டுவதெல்லாம் அவர்களது அரசு — அதாவது தமிழை உபயோகிக்கும் உரிமை; மரபுவழித் தாயகங்களில் சுதந்திரப் பிரஜைகளாக உறுதி செய்தல் என்பவைகளே.

தமிழரசுக் கட்சி ஒன்றை நன்ருக உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய திருமலைத் தீர்மானங்கள் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு நிரந்தர அடித்தளமாக ஒருபோதும் அமைய முடியாது.

## எமது தீர்வு

நாம் தமிழ்பேசும் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க விரும்புகிறோம். நாம் நாட்டை இரண்டாகப் பிளக்க விரும்பவில்லை. எமது பிரச்சினை இதுதான் நாம் இதனை எதிர்கொள்வோம். எமது கருத்துப்படி மொழிப் பிரச்சினை மிக எளியது.

## சிங்களப் பாசக் கயிற்ருற் கட்டி

காலாகாலத்திற்கும் சிங்களம் மட்டும் இந்நாட்டினை ஒன்றுபடுத்தும் ஒரேமொழியாக நிரந்தரமாய்ப் பிரதிட்டை செய்யப்படவேண்டும் என்பதே எமது நம்பிக்கை இலங்கையில் வாழும் சிங்களரும் தமிழரும் ஒரே தேசிய இனம் ... ஒவ்வொரு ...

இந்த இலட்சியத்தை அடைய இங்கு ஒரே தேசிய இனம் இருக்கவேண்டும். இதனை அடைய ஒரே மொழி மட்டும் இருக்கவேண்டும்.

## பிறந்துள்ள தமிழருக்குச் சிங்களம்

தமிழ்பேசும் மக்கள் சிங்களத்தை ஏற்க ஒரு வழிவகை கண்டு பிடிக்கப்பட்டால், அல்லது இன்று பிறந்துள்ள (தமிழ்க்) குழந்தைகள் எல்லாம் சிங்களம் படிக்கும் என எமக்கு உறுதியளிக்கப்பட்டால், அதன் மூலம் சிங்களம் மட்டும் ஒரே மொழியாக இருக்க வழிவகுக்கப்படுமானல் இப்போது சிங்களம் தெரியாத தமிழ் மக்களுக்குச் சலுகை அளிப்பதைச் ஸ்ரீ. ல. சு. க. ஒருபோதும் எதிர்க்காது என உறுதி கூறுகிறேன்.

## பிறக்கப்போகும் தமிழருக்குச் சிங்களம்

நாம் வட, கிழக்கு மாகாணங்களில் சிங்களத்திற்கு வாய்ப்பேச்சுச் சேவை செய்யவிரும்பவில்லை. இந்நாடு ஒரே நாடாக இருக்கும் என்பதற்கான நியாயமான உறுதி எமக்குத் தேவை.

"இதே பீலிக்ஸ்தான் சமாதானத்துக்குப் பதில் இனபேதத்தையும், சமாதானத்துக்குப் பதில் சண்டையையும் கொண்டுவந்துள்ளார். பொருளாதார சுபீட்சத்துக்குப் பதில் சீரழிவைக் கொண்டுவந்துள்ளார்! எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவகைச் சர்வாதிகாரம் நாட்டைப் பயமுறுத்துகிறது. திங்கற்ற பிரதமரின் பாரிய சேலைக்குப் பின் சிறிதளவு சர்வாதிகாரம் பற்றிப் பேசும் அற்பத்தனமான குட்டிச் சர்வாதிகாரி மறைந்துள்ளார்"— எனத் திரு. மு. பாலசுந்தரம் இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

—(அன்சாட் 23-11-1961 நிரல் 1852)

"கௌரவ நிதிமந்திரி நிரந்தர மந்திரி" என திரு. பீட்டர் கெனமன் இவரைப் பாராட்டினுர்.

—(அன்சாட் 14-3-61)

திரு. என். எம். பெரேரா இவரை "அமைச்சர்களுக்கு அமைச்சர்" என்ற பொருளில் "சுப்பர் மந்திரி" எனப் பாராட்டி வருகிறர்.

தமிழ்மொழிக்குத் தேவையான எல்லா வாக்குறுதிகளையும் கொடுங்கள். அவர்கள் தமிழைப் படிக்கட்டும்; தமிழ்க் கலாசாரத்தை அழிக்கவேண்டாம் அது நிலைக்கட்டும்.

இப்பொழுதிருந்து பிறக்கப்போகும் குழந்தைகளுக்காவது சிங்களம் கற்பிக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள். இதனைச் சாதிக்க முடியுமானல் மொழிப்பிரச்சினைக்கு நின்று நிலைக்கக்கூடிய நிரந்தர தீர்வை காண முடியும்.

"சிங்களம் மட்டும் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும். இதற்கு அமைவாக சமாதானமாக; அமைதியாக சிங்களத்துக்கு மாறும்வரை வேண்டிய இடைக்கால ஏற்பாடுகளைச் செய்யலாம்.

## இரண்டாகப் பிளக்காதே

"நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும் என்ற ஆசையினுல் நாட்டை நிரந்தரமாக இரண்டாகப் பிளக்கும் தீர்வை நாம் ஏற்கப்போவதில்லை. சிங்களம் மட்டும் இந்நாட்டின் ஆட்சிமொழி ஆக்கப்படாத தீர்வை நாம் ஏற்கப்போவதில்லை.

நீங்கள் (யூ என். பீ.—தமிழரசு—காங்கிரசு) விரும்புவதுபோலத் தமிழ்மொழியை வடக்கு கிழக்கின் ஆட்சி மொழியாக்கி நாட்டை நிரந்தரமாக இரண்டாக்கும் திட்டத்தை நாம் நிச்சயமாக ஏற்கமாட்டோம். இலங்கையின் வரலாற்றில் 2500 ஆண்டுகள் ஒரு குறுகிய காலம். தேவைக்கேற்ப, காலத்திற்கேற்ச சலுகைகளை வழங்க நாம் தயாராக இருக்கிறோம். ஆனல் சிங்களம் மட்டும் நிலையை நாங்கள் அடைய விரும்புகிறோம். ஆனல் எமது முன்னேரளித்த அருஞ்செல்வத்தின ஒரு பகுதியை நிரந்தரமான நாட்டுப் பிரிவினை மூலம் (சம அந்தஸ்து மூலம்) நாம் இழந்துவிடத் தயாராக இல்லை.

## எழுத்தை அழிக்க இறைவனுல் ஆகுமா?

நீங்கள் (யூ. என். பி.) பொதுத்தேர்தலின் போது (1965) தேர்தல் தொகுதி

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழர் கூட்டணியும் கட்டுப்பாடும்!

எந்த ஒரு அரசியற்கட்சிக்கும் அல்லது இயக்கத்துக்கும் ஆணிவேராக, அடி அத்திவாரமாக இருக்கவேண்டியது 'கட்டுப்பாடு' எனும் சீரிய பண்பாடு ஆகும்!

ஒழுங்கு, கட்டுப்பாடு அற்ற எந்தவொரு இயக்கமும் அல்லது கட்சியும் நாட்டு மக்களை வழி நடத்தவோ அவர்களுக்குத் தலைமை தாங்கவோ முற்றும் தகுதியற்றது என்பதை எவரும் மறுக்க முடியாது!

இதனால் தான் தமிழ் நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களும கட்டுப்பாடு, கடமை, கண்ணியம் ஆகிய மூன்று பண்புகளை தமது கட்சியினருக்கு அடிக்கடி வற்புறுத்தி வந்தார்.

அண்ணாவுக்குப் பின்னர், தி. மு. கழகத் தலைமையை ஏற்ற டாக்டர் கலைஞர் அவர்களும்—விளைவுகளைப்பற்றிச் சிந்திப்பதைவிட—கட்டுப்பாடே கட்சிக்கு முக்கியம் என்ற அந்த அடிப்படையில் உறுதியுடன் நின்று கழகத்தை வழிநடத்தி வருகிறார்!

சிங்கள அரசியற்கட்சிகளில், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இந்தக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதற்கு அதன் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, துணிகரமான பல நடவடிக்கைகளை அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகிறார். திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவின் கொள்கைகளையோ—ஐக்கிய தேசியக் கட்சியையோ நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்—கட்சிக் கட்டுப்பாட்டைக் காப்பாற்ற அங்கு எடுக்கப்பட்டுவரும் உறுதியான காத்திரமான நடவடிக்கைகள் மெச்சத்தகுந்தவையாக அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டுவதில் தவறில்லை என்று கருதுகிறோம்.

இலங்கைத் தமிழர்களின் அரசியற்கட்சிகளைப் பொறுத்தவரையில்—தமிழ் பேசும் மக்களின் பேரியக்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சி, கட்டுப்பாட்டை காப்பாற்றுவதிலும் பேணுவதிலும் மிகவும் உறுதியாகவே கடந்த காலங்களில் செயற்பட்டு வந்திருக்கிறது. கட்சியின் மூத்த உறுப்பினராக இருந்தவரும், கட்சியின் மூளையென வர்ணிக்கப்பட்டவருமான திரு. வ. நவரத்தினம் முதல் யாழ்ப்பாண பா. உ. திரு சி. எக்ஸ். மார்ட்டின் வரை—எத்தனையோ பேர் கட்டுப்பாட்டை மீறியதற்காக தமிழரசுக்கட்சியிலிருந்து கடந்த காலங்களில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

தனிப்பட்டவர்களைவிட கட்சியே பெரியது—கட்சியின் முடிவுகளே பெரியது—கட்சியெடுக்கும் முடிவுகளுக்கு அமைந்து நடக்காதவர்களுக்கு கட்சியில் இடமில்லையென்ற அந்த அடிப்படையிலேயே எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி—தமிழரசுக் கட்சி கடந்தகாலங்களில் நடவடிக்கையெடுத்து வந்திருக்கிறது.

ஆனால் தமிழர் கூட்டணி அமைந்தபின்னர் கட்டுப்பாடு எனும் பண்பு உறுதியாகவும் இறுக்கமாகவும் கூட்டணிக்குள் பின்பற்றப்பட்டு வரவில்லையென்கிற ஏக்கம் தமிழ் மக்களின் உள்ளங்களில் இருந்து வருவதை நாம் மூடிவைக்க விரும்பவில்லை. இப்பத்திகளில் நாமே இதை சுட்டிக்காட்டி பலதடவைகளில் கண்டித்துமிருக்கிறோம்!

ஆனல்—தமிழர் கூட்டணி அமைந்த நேரத்தில்—எப்படியும் தமிழ் அரசியற் கட்சிகள் அனைத்தும் ஓரணியாக இணைந்தாலே போதுமென்று எதிர்பார்க்கப்பட்டதே தவிர—'கட்டுப்பாடு' பற்றியோ சட்ட திட்டங்கள் பற்றியோ அப்போது யாரும் சிந்தித்ததும் இல்லை—சிந்திக்கவும் முடியாது. ஒற்றுமையொன்றையே குறிக்கோளாக வைத்து கூட்டணி உதயமாகியது.

புதிய அரசியற்சட்டம் தமிழ் மக்களுக்கு இழைத்திருக்கும் கொடுமைகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நான்காண்டுகளுக்கு முன் திருகோணமலையில் இணைந்த தமிழர் கட்சிகள் கடந்த நான்காண்டுகாலமாக ஒன்ருக இணைந்து தமிழர் கூட்டணியாக இயங்கி—கலந்து பேசி—விவாதங்கள் நடத்தி—சிந்தனையில் கொள்கையில் ஒருமைப்பாடு (Consensus) கண்டு—தமிழினத்தின் மீட்சிக்கு இதுதான் ஒரே வழி—இறுதி வழியென தமிழ் ஈழ இலட்சியத்தை தாமாகவே ஏற்றுக்கொண்டிருக்கின்றன; தமிழர் கூட்டணியின் அடிப்படை இலட்சியம் பற்றிய தெளிவு இன்ற ஏற்பட்டு விட்டது!

எனவே அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த அடிப்படைஇலட்சியத்தையேநோக்கமாகக் கொண்டு,தமிழர் கூட்டணிக்கென ஒரு யாப்பும் (Constitution), ஏனைய சட்டதிட்டங்களும் அமைப்புத்திட்டங்களும் வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கும் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் போது உருவாக்கப்பட வேண்டும்; நிறைவேற்றப்பட வேண்டும்! தமிழர் கூட்டணியின் கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள், சட்டதிட்டங்கள், அமைப்பு முறைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட வேண்டும்.

அது மட்டுமன்றி—தமிழர் கூட்டணியெனும் இயக்கத்தின் பெயரையும் (T U F) இப்போது அது ஏற்றுக்கொண்டிருக்கிற இன விடுதலை இலட்சியம் அதன்பெயரிலேயே தொனிக்கிறவகையில் தமிழர் விடுதலை முன்னணி (Tamils Lib ration Front) என்றுமாற்றுவது பற்றியும்கூட்டணி மாநாடு ஆராய வேண்டும்!

தமிழர் கூட்டணி மாநாட்டில், கூட்டணியின் சட்டதிட்டங்களும், கொள்கைப் பிரகடனமும் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர், அவற்றை மீறுபவர் எவராயிருந்தாலும், தயவு தாட்சண்யமின்றி அவர் மீது நடவடிக்கை யெடுக்கப்படவேண்டும்; கூட்டணியின் கட்டுப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும்! அதற்குப் பின்பும் தமிழர் கூட்டணியின் கட்டுப்பாடு மீறப்படுமானல்—அப்படி மீறப்படுவதை கூட்டணியின் தலைமை சகித்துக்கொண்டிருக்குமாளுல்—அதை ஒருபோதும் மன்னிக்கவே முடியாது!

## உடைக்கப்பட்ட நினைவுத் தூணும் அதிகார வர்க்கத்தின் சின்னத்தனமும்!

ஆட்சியாளரின் ஏவல் படையான பொலிசாரின் காரணமற்ற மிருகத்தனமான தாக்குதலினல் உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாளான 1974 சனவரி 10ம் நாள் பத்து தமிழர்கள் பதைபதைக்க துடிதுடிக்க உயிரிழந்தனர்: அநியாயமாக கொல்லப்பட்ட இந்தத் தமிழர்களின் நினைவாக 1975ம் ஆண்டு சனவரி 10ல் நினைவுச் சின்னம் நிறவப்பட்டது. அது அடித்து நொறுக்கப்பட்டதையடுத்து, 1976 சனவரி 10ல் மீண்டும் தமிழ் இளைஞர்கள் நினைவுச் சின்னத்தை அதேயிடத்தில் நிறுவினர். அதையும் சகிக்கமாட்டாத கயவர்கள் அதை இரண்டாவது தடவையாகவும் சிலை வைத்த மூன்றாவது நாளிலேயே மீண்டும் இடித்துத் தள்ளினர்.

உடைந்து கிடக்கும் அந்நினைவுச் சின்னத்துக்கு தமிழ் மக்கள் இப்போது அஞ்சலி செலுத்தி வருகின்றனர். 'மே' நாளன்று தமிழர் கூட்டணி ஊர்வலத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்கள், விவசாயிகள் கூட தமிழ்த்தியாகிகளின் அந்த நினைவுச் சின்னத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதையும் பொறுக்கமுடியாத பொருமிக்கிடக்கும் அதிகார வர்க்கம், இப்போது, அந்த உடைந்த நினைவுச் சின்னத்தையும் அங்கிருந்து அகற்ற திட்டமிடுவதாக நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டது.

தமிழர்களை அழிப்பது மட்டுமன்றி—அவர்களது நினைவே இல்லாமற்செய்யவும் சதி நடக்கிறது. உடைந்த நினைவுத் தூணைக்கூட இவர்கள் ஒருவேளை அகற்றலாம். ஆனல் உள்ளத்து நினைவுகளையும் அந்த இடத்தில் தமிழர்கள் அஞ்சலி செலுத்துவதையும் யாரால் தடுக்கமுடியும்?

## மறைமலையடிகள் நூற்றண்டு விழா

தனித் தமிழியக்கத்தின் தந்தை மறைமலையடிகளாரின் நூற்றண்டு விழா எதிர்வரும் ஜூலை 15ம் திகதி கொழும்பில், ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையின் சார்பில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளில் மேற்படி பேரவையின் தலைவர் திரு. ஈழவேந்தன் இப்போது ஈடுபட்டுள்ளார். பேரவையுடன் இணைந்து இந்த விழாவைக்கொண்டாடவிரும்பும் தமிழ் மன்றங்கள், இலக்கிய மன்றங்கள் உடனடியாக திரு. மா. க. கனகேந்திரன் (ஈழவேந்தன்) 150 சுபத்திரராம வீதி நுகேகொடை எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனா.

### பருத்தித்துறை தொகுதி தமிழர் கூட்டணி கிளை அமைப்புக் கூட்டம்!

தமிழர்கூட்டணியின் பருத்தித்துறைத்தொகுதிக் கிளை அமைப்புக்கூட்டமும் செயற்குழு உறுப்பினர் தெரிவும் 13-5-76 மாலை 4மணிக்கு பருத்தித்துறை சிவா கலாலயத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினமும், செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கமும்உரையாற்றுகிருர்கள். வடமாராட்சி மேற்கு கூட்டணி ஆதரவாளர்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு கூட்டம் சரியாக பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்ட அழைப்பாளராக சட்டத்தரணி இ. து. இரத்தின சிங்கம் பணியாற்றுகிருர்.

### சண்டித்தனம்...

—1-ம் பக்கத் தொடர்

அவருடன் சென்ற மற்றவர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற பொலிசார் விசாரணை நடத்தி, எச்சரிக்கைசெய்து, அதன் பின்னரே ஓடித்தப்புமாறு அவர்களை விட்டதாகவும் தெரியவருகிறது.

### போனமச்சான்...

—1-ம பக்கத் தொடர்

தொடங்கிவிட்டதாம். (அமிர்தலிங்கம் எனும்) சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கவரும் [illegible] வருகவருக எனவர [illegible] பையன்.

### "ஈழத் தமிழ...

—1-ம் பக்கத் தொடர்

அற்ப சலுகைக்காக தமிழனின் சுதந்திரக் கோரிக்கையையும் தன் மானத்தையும் விற்றுவிட தமிழர் கூட்டணி ஒரு போதுமே தயாராக இல்லையென்பதை ஆணித்தரமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.'' என்று தந்தை செல்வா அவர்கள் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

அராலி காரைப்பிட்டி பிள்ளையார் கோவில் வீதியில், அராலி பொது மக்களால் தந்தை செல்வாவின் 79வது பிறந்த நாள் விழா கடந்த 2-5-76 ஞாயிற்றுக்கிழமை மாலை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. திரு. மு. சதாசிவம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பேசுகையிலேயே தந்தை செல்வா அவர்கள் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தினர்.

அவர் மேலும் பேசியதாவது:—

"தமிழனின் பிறப்புரிமையை—தனித்துவத்தை—மாட்சிமையை — சுதந்திரக் கோரிக்கையை எடுத்துரைக்கும் வகையிற்தான் கடவுள் இன்று என்னை உங்களுடன் வைத்திருக்கிருர். இழந்த தமது உரிமைகளை சமாதான முறையில் பெற்றுக்கொள்ள கடந்த கால் நூற்றுண்டு காலமாக தமிழினம் கடைப்பிடித்துவந்த பொறுமைக்கு எடுத்துக்காட்டாகத் தான் இவற்றை எமது இளைஞர்களும் எதிர்கால சந்ததியும் அறிந்துகொள்ளும் வகையில்தான் நான் உயிருடன் இருக்கிறேன்.

கடந்தகாலங்களில் சமாதானமாக நமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள நாம் எடுத்த முயற்சியில கண்டது கசப்பான அனுபவம் தான். தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி சமநிலையில் வைத்துக்கொள்ள சிங்கள மக்கள் ஒருபோதும் தயாராக இல்லை; தமிழர்களை இரண்டாந்தர மூன்றாந்தர பிரஜைகளாக—அடிமைகள் போல — ஆளப்படும் மக்களாக வைத்துக்கொள்ளவே அவர்கள் விரும்புகிருர்கள் என்பது இப்போது உறுதியாகத் தெரிந்து விட்டது. இது கடந்த காலத்திலிருந்து நாம்பெற்றபாடம்.

"சிங்களநாட்டின் இரண்டு பிரதான அரசியற் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, ஒப்பந்தமும் எழுதிப் பார்த்துவிட்டோம். இந்த ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ள — தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க— சிங்கள மக்கள் விரும்பவில்லை. சிங்கள மக்களின் நெருக்குதலினல் ஒப்பந்தங்கள் கிழித்து எறியப்பட்டன. இப்படிச் செய்ததன் மூலம், சிங்கள மக்கள் எம்மை வெளியே தூக்கியெறிந்து விட்டார்கள். இந்த நிலையில் நாம் எமது சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு பாடுபட்டு வருகிறோம்,

"கடந்த காலத்தில் படித்த இந்தப் பாடங்களையெல்லாம் மறந்து விட்டு இன்னும் சிலர் பேச்சுவார்த்தைபற்றி பேசிவருகிருர்கள். பேச்சுவார்த்தையென்று கூறிக்கொண்டு—அற்ப சலுகைகளுக்காக எமது இனத்தின் தன்மானத்தையும், சுதந்திரக் கோரிக்கையையும் விற்றுவிட நாம் ஒருபோதும் தயாராக இல்லை என்பதே அவர்களுக்கு நான் கூறுகிற ஒரே பதிலாகும்."

## எம். பி. மனைவிக்கு அதிர்ஷ்டம்!

தமிழ்ப் புத்தாண்டையாழ் மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கம் ஒன்றில் நைலோன் சேலைகள் லொத்தர் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டதாம். அப்போது லொத்தர் ஏதும் இல்லாமலே முன்னுள் சட்டம்பியாக விருந்த இந்நாள் எம். பி. யொருவரின் மனைவியார் மூன்று நல்லசேலைகளை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டாரம். இது எப்படி? எம். பி பெண்டாட்டிக்கு மட்டும் முறைகேடான தனிச் சலுகையென்று கேட்கிருர்கள் ஊர் மக்கள்.

## ஆனைப்பந்தியில் கருத்தரங்கு!

யாழ்—ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் 9-5-76 ஞாயிறு மாலை திரு. நா. த. செல்லத்துரை அவர்கள் தலைமையில் கூட்டணிக் கருத்தரங்கு ஒன்று நடைபெறுகிறது. அ. அமிர்தலிங்கம் அ. கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோருட்பட பலர் உரையாற்றுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டை நோக்கி வருக! நமக்கோர் கொற்றம் அமைத்திடும் திட்டம் தீட்டிட வருக!

## கொடியோடு வருக! நமக்கோர் 'முடி' காணும் முடிவு காண வருக

மே 14, 15ம் நாட்களில்—
வட்டுக்கோட்டைத் தொகுதியிலே மாநாடு!
எட்டுத்திசையும் எழுச்சிகொள வைக்கும்
நம் இயக்கத்தின் பாடி வீடு!
கூட்டணி வரலாற்றிலே இ.்.து ஓர்
பொன்னேடு!
கொட்டுக முரசென்று தமிழா நீ வந்து
கூடு!

எங்கள் பகைவர் எங்கோ மறைந்திட
இங்குள்ள தமிழர் நாம் ஒன்றாய் இணைந்து
நானூறு ஆண்டுகளின் பின் நாம் கூடும்
நமது முதல் மாநில மாநாடு!
தாயகம் காத்திட—தமிழ் மண்ணை மீட்டிட
'மே 14ல் நாம் இணைந்தோம்!
ஓய்தல் செய்யோம்—தலைசாயுதல்
செய்யோம்!
தாய்த் திருநாடு தமிழ் ஈழம்
மீட்போமென
முழங்கிடும் மாநாடு இது!

சிறைச்சாலைகளை நிரப்பிடவும்
நெருப்பாறுகளைத் தாண்டிடவும்
நெஞ்சத்தில் குண்டேற்று மாண்டிடவும்
கந்தப்பந்தடி போல தம்மைச் சாருக்கிடவும்
பெருப்புடன்புயல்போல பணியாற்றிடவும்
தயங்கிடாத
இயக்கத்துக் கண்மணிகள்
எறும்பு போல் பணியாற்றும்
தூய தொண்டர்கள்
இலட்சியத்திலே
எ.்.கு மனம் கொண்டோர்
எரிகழலென இணைகிறார்
வட்டுக்கோட்டையிலே!

சிறைச்சாலையிலே நம் இளைஞர்
அறுபதின்ம—அடி உதைகளை
கொடுமைகளைத் தாங்கியபடி!
கவிக்குயில் காசி ஆனந்தன்
அவர் தம்பியர் இருவர்
செயல் வீரன் சேனாதி
திண்ணிய நெஞ்சன் வண்ணை —இப்படி
எண்ணிறந்த நம் உடன் பிறப்புக்கள்
பூட்டிய இரும்புக் கதவுக்குப் பின்னால்!
வாடுகின்றனர் ஏங்கிய படி
அவர்மீது

விசாரணையுமில்லை—விடுதலையுமில்லை!
வேதனையில் வாடுகிறார் அவரைப் பெற்றோர்

சிங்கத்தமிழன் சிவகுமாரன் தன்
உயிர் தந்தான் தமிழைக்காக்க!
வெங்கொடுமைச்சாக்காட்டில்
கடல் கடந்து உயிர்நீந்தான்
இராசரத்தினம்—இனிய தமிழ் ஈழம் மீட்க!
செங்களம் ஆடிடுவோம்—செவ்விரத்தம்
கொட்டிடத்தான் நேர்ந்தபோதும்
பங்கமுறு தமிழ் இனத்தை வாழவைக்க
உயிர்தருவோம் என்று கூறி
இங்கி நந்து எப்படியோ மறைந்து சென்று
எங்கெங்கோ தொலை தூரம்
அலைந்துலைந்து
பொங்கு தமிழ் வெறியோடு புலிகள்போல
மலைகளிலும் குகைகளிலும் மறைந்து
வாழ்ந்து
துன்பங்கள் கோடியென வந்திட்டாலும்
குலையாத உறுதியுடன் வாழும்
கொள்கை வீரர்தாம் எத்தனையோ!

அன்னவர்கள்—அன்னையர்கள்
வடிக்கின்ற கண்ணீரில்—செந்நீரில்
தமிழ் ஈழத்தின்
பன்னரிய சுதந்திரத்தையெழுதிடவே
பாசறை அமைக்கின்றார் கோட்டையூரில்!

கோட்டைகட்டி, கொடி உயர்த்தி
கொற்றம் வைத்து ஆண்டிருந்தோம்
குனிந்திடவே தெரியாமல் தலை நிமிர்ந்து
வாழ்ந்திருந்தோம்—அந்த நாளில்!
ஏட்டினிலே படிக்கையிலே
இனித்திடும் நம் நெஞ்சம்
அதனை எண்ணும்போது
ஆர்த்தெழுந்து சுதந்திரத்தை
பெறவேண்டுமென்கின்ற

ஆர்வம் துள்ளும்!
போர்த்துக்கேயன் போரிட்டு
பொய் வழியிற் பிடித்துக்கொண்ட
நமது நாட்டை
நேற்றுவந்தான் ஆளுவதோ—
நீடிக்க விடுவதுவோ இந்தக்கேட்டை!

இந்த நிலையை மாற்றிட
எங்கள் நாட்டை மீட்டிட
மீண்டும் தமிழ் ஆண்டிட
ஏங்கும் தமிழர் வாழ்ந்திட
தூக்கம் நீங்கியெழுந்திட

தூய போர் துவக்கிட
ஏற்ற திட்டம் தீட்டிட
எமது அணியின் மாநாடு!
நானூறு ஆண்டுகளுக்கு முன்னர்
நாம் இழந்த திருநாட்டை
தேனூறும் ஈழத்தை
தெவிட்டாத நம் தாயை
ஆராரோ ஆளுவதோ?
அனுமதிப்பதோ இல்லை
தீர்மானம் கண்டு
செயலிலிறங்கிடவே
வீரர்களே கூடிடுவீர்!
வேங்கைகள் போல் மாநாட்டில்!

திண்ணிய நெஞ்சத்தான்
திருவிடத்தின் முன்னோடி!
எண்ணமும் செயலும் நம்
இனத்துக்கே தான் தருவோன்!
கண்ணியம் மிக்கோன்!
நம் கானைகளின் தனித்தலைவன்!
எண்ணரிய நம் தந்தை
செல்வாவின் தலைமகனும்!
துன்பங்களத்தனையும் ஓர்
புன்னகையில் வென்றிடுவான்!
சிங்களத்து ஆட்சியாளர்
நடு நடுங்கும் ஒரே தலைவன்!
ஆம், அண்ணன் அமிர்தலிங்கன்—
கட்டி வா என்றால் வெட்டிவரும்
ஆற்றல்படைத்த தம்பிப்படையின்
தானைத்தலைவன்—
வட்டுக்கோட்டைக்கு அழைக்கின்றார்!
மாநாடுகாண அழைக்கின்றார்!

மங்கையர்க்கரசி பேச்சென்றால்
அதில் மானம் இழையோடும்!
சிங்கத்தின் சீற்றம்—யானையின் பிளிறல்
செயல் செய்யத் தூண்டும் ஆற்றல்!
இத்தனையும் கொண்டு இடிமுழக்கமென
இன விடுதலைப் போரில் முழங்கும்—
மங்கையர்க்கரசி அழைக்கின்றார்!
மாநாடு கண்டிட வருகவென!!
மகனேயும் மாசற்ற கணவனையும்
தமிழுக்குத் தந்திட்ட இந்தத்
தாயின் குரல் கேட்டெழுந்திடுக!

மங்கையர் வருக! மாதரார் வருக!
சிங்கமென முழங்கும் சிறுத்தைகளே வருக!
அடலேறு போன்ற நம் அருமைத்தம்பியரே
வருக!
மாணவர் பெரும்படையே வருக வருக!
மாணவியரே நீவிரும் வருக!
விவசாயத் தோழர்களே வருக வருக!

விடுதலை வீரர்களே வருக வருக
தொழிலாளத் தோழர்களே வருக வருக!
தோள்தட்டி ஆர்த்திடும் காளையே வருக!
வாலிபர் வருக! வயோதிபரும் வருக!
இஸ்லாமிய சகோதரர்களே நீவிரும் வருக!

**மே, 14, 15ம் நாட்களில்**

ஆர்த்தெழுகின்ற சமுத்திரம் போல
போர்ப்புலிகளாய் கூடிடுவோம்!
ஆட்சியாளர் அலறிப்புடைத்திட
அன்னைத்தமிழாள் நெஞ்சம் குளிர்ந்திட
பூட்டிவைக்கப்பட்டிருக்கும் தம்பியர்
புளகாங்கிதமடைந்திட
காட்டிக்கொடுத்திடுவோர்
கருகிவாடிட
பாட்டுப் பொருளாகி விட்ட
பைந்தமிழ் வீரன் சிவகுமாரன் மகிழ்ந்திட
வரலாற்று
ஏட்டினிலே இடம் பெற்றுவிட்ட
வன்னியசிங்கம்,
வீ. ஏ. கந்தையா,
இராசவரோதயம்,
டாக்டர் நாகநாதன்,
மூதூர் ஏகாம்பரம்,
அழகக்கோன்,
இராசமாணிக்கம்,
மாணிக்கவாசகம்.
போன்ற அமரர்கள் ஆசி வழங்கிட
வட்டுக்கோட்டையிலே கூடுவோம்!
ஈழ விடுதலைப் பண் பாடுவோம்!
நாடு நமக்கேயென்று முழங்குவோம்!
நாளை நமதேயென்று முழங்குவோம்!
கோட்டை நோக்கி வருக!
நமக்கோர்
கொற்றம் அமைத்திட வருக!
கொடியோடு வருக!
நமக்கென்றோர்
'முடி'காண வருக!

—கோவை


எண்ணெய் ஸ்நானத்தின் போது
ஒலிவ் ஸ்நானப் பவுடரைப்

பாவிப்பதால் தலையிலும் உடம்பிலும் உள்ள அழுக்கை நீக்கி நறுமணம் கமழச் செய்கிறது, ஒரு பைக்கற் /- 25 சதம் மட்டுமே.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசு ஆசை காட்டலாம்; அச்சமூட்டலாம் அடக்குமுறையை எம் மீது ஏவியும் விடலாம்!

## எந்த நிலையையும் சந்திக்கத் தயாராக இன விடுதலை வேள்வியிற் குதிப்போம்!

### கரம்பொன் கருத்தரங்கில் கா. பொ. இரத்தினம் பேச்சு!

அமைச்சர் இலங்கரத்தின கூறியது போல மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், இந்தியாவிலும், இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தமிழர் கூட்டணியின் கோரிக்கையினை ஆதரித்து நம் நாட்டு மக்களும் பிறநாட்டு நண்பர்களும் பிரசாரஞ் செய்கின்றார்கள். இலங்கை அரசாங்கத்தை அசைக்கத்தக்க அளவுக்கு இப்பிரசாரங்கள் நடைபெறுகின்றன,

இலண்டன் மாநகரில் "ஈழ விடுதலை முன்னணி" எனும் இயக்கம் எங்கள் போராட்டத்துக்குப் பல துறைகளில் ஆக்கமும், ஊக்கமும் நல்கி வருகின்றது இந்த முன்னணி "ஈழ விடுதலை" எனும் செய்தி ஏட்டையும் வெளியிடுகின்றது. இந்த இயக்கத்தினர் சென்ற ஆண்டில் இலண்டனில் நடைபெற்ற இரண்டாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டப் போட்டியின்போது ஓவல் விளையாட்டரங்கிலே இலங்கை அரசாங்கத்தின் தமிழ் இனக்கொலையை உலகமறியச் செய்வதற்கு ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இந்த ஆண்டு பெப்ருவரி மாதம் நாலாம் நாளன்று தமிழ் ஈழப் பிரேரணையைத் தேசிய அரசுப் பேரவையில் முன்மொழிய நாங்கள் செய்த முயற்சியை ஆதரித்து இந்த முன்னணி இலண்டனில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்திப் பிரித்தானியப் பிரதமருக்கு ஒரு மகசரையும் சமர்ப்பித்தது.

இந்த முன்னணியைப் போலவே இலண்டனிலுள்ள ஈழத் தமிழர் முன்னேற்றக் கழகமும் பல துறைகளில் எங்கள் கோரிக்கைக்கு ஆதரவும் ஆக்கமும் நல்கி வருகின்றது,

தமிழ் நாட்டிலே உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் கலாநிதி இரா. சனார்த்தனம் எங்கள் விடுதலைக்காகப் பல தொண்டுகள் செய்து வருகின்றார். எங்களுக்காகச்சிறைசென்று வந்துள்ளார். சனார்த்தனன் என்ற பெயரைக் கேட்டால் இலங்கை அரசு நடுக்கம் அடைகின்றது. சென்னையிலுள்ள உலகத் தமிழர் பாதுகாப்புப் பேரவையும் எங்களுக்காக உழைத்து வருகின்றது.

இலங்கை ஓர் அமைதியான நாடு. இங்கு இனப் பிரச்சினை—தொழிலாளர் பிரச்சினை முதலியன இங்கு இல்லை; இங்கே நடுநிலை நாடுகளின் உச்சி மாநாட்டை நடத்தலாம். என்று பிரசாரம் செய்த இலங்கை அரசாங்கம் இலங்கைத் தமிழரின் கோரிக்கைக்கு வெளிநாடுகளிலிருக்கும் ஆதரவையும், பிரசாரத்தையும்கிளர்ச்சிகளையும் கண்டு இன்று அவலப்படுகிறது. எப்படியும் எங்கள் இலட்சியக்குரலை ஒலிக்காமல் செய்யவேண்டும் என்று அங்கலாய்க்கின்றது. ஆசை காட்டியும் அச்சுறுத்தியும் எங்களை மடக்கி அடக்கலாம் என்று எண்ணுகிறது,

உச்சி மாநாடு நடக்கவிருக்கும் ஓகத்து மாதத்துக்குமுன் எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வதாக அரசாங்கம் பாசாங்கு செய்யலாம் எங்களிடையேயுள்ள அப்பாவிகளை ஏமாற்றவும் உலக நாடுகளிலே பிரசாரஞ் செய்யவும் இந்த அரசாங்கம் தமிழர் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் முன்வரலாம். தமிழ்ஈழத்தை நிறுவுவது பற்றிய பேச்சுவார்த்தையைத்தவிர வேறெதற்கும் நாம உடன்படக்கூடாது.

பேச்சுவார்த்தைப் பேச்சுக்களினாலே எங்கள் போராட்டத்தையோ வெளிநாடுகளில் எங்களுக்காகப் போராடுகின்றவர்களின் முயற்சிகளையோ நாம் தளரவிடக் கூடாது.

அரசாங்கத்தின் ஆசை வார்த்தைகளுக்கு நாம் இடங்கொடுக்காவிடின் தமிழர் கூட்டணியைத் தடைசெய்வதற்கும், பிரிவினை பற்றிப்பேசுவதைச் சட்ட விரோதமாக்குவதற்கும் இந்தச் சிங்கள ஏகாதிபத்தியம் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்த்து நாம நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இப்பொழுது நாட்டுப் பிரிவினை பற்றி—தமிழ் ஈழம் குறித்து எழுத்தில் எதுவுஞ் செய்ய முடியாத படி அவசரகாலச் சட்டத்தால தடுத்துள்ளது இந்த அரசாங்கம். எங்களுடைய அரசியல் கூட்டங்களுக்கு ஒலி பெருக்கி அனுமதி தரவும மறுக்கின்றது. அமரர் வன்னியசிங்கத்தின் நினைவு நாள் கூட்டத்துக்கும் ஒலிபெருக்கி அனுமதியை மறுக்கும அளவுக்கு அரசாங்கம அச்சம் கொண்டுள்ளது. இந்த அரசாங்கம் 1971ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அவசரகாலச் சட்டத்தினாலேயே ஆட்சியை நடத்தி வருகின்றது. இஃது ஒன்றே இந்த அரசாங்கத்தின் ஆற்றலின்மையை—அச்சத்தை—எடுத்துக்காட்டத் தக்கது.

விடுதலைவேட்கைகொண்ட மக்களை, உரிமைக்காகப் போராடும் மக்களைச் சட்டத்தால் — சர்வாதிகாரத்தால் — அடக்கி மடக்கின செய்தி உலக வரலாற்றில் இல்லை அடக்குமுறைகளும் அச்சுறுத்தும் செயல்களும் கடக்கட விடுதலைவேட்கை மேலும் மேலும் கிளர்ந்தெழும்; விடுதலைப்போரிலே பங்கு பற்றாமல் பார்வையாளர்களாக இருக்கும் தமிழர்களும்-ஏன், இப்பொழுது இனத்தை விற்றுப் பிழைக்கும் தமிழ் இனத்துரோகிகளும் கூட விடுதலைப் போரிலே கலந்துகொள்ளும் நிலைமையும் உருவாகும்,

அடக்குமுறைகளுக்கு அஞ்சாமலும் அசையாமலும் நாம் உறுதியோடும் துணிவோடும் ஊக்கத்தோடும் முன்னேறுவோமானால் இந்த அரசாங்கம் எம்மை அடிமைப்படுத்தி ஆளும் முயற்சியைக் கைவிடவேண்டிய நிலைமை உருவாகும்.

எங்கள் கொள்கையில் எங்களுக்கு அசைக்கமுடியாத உறுதியும், அகிம்சைப் போராட்டத்தில் தளராத நம்பிக்கையும், நீதி — நியாயம — அறம் வெல்லும் எனும் வைராக்கியமும், விடாமுயற்சியும் எங்கள் ஒவ்வொருவரிடத்தும் நிலைத்து நிற்குமானால் எங்கள் சுதந்திரம நிச்சயம் கைகூடும்.

"அரிய என்று ஆகாத இல்லை பொச்சாவாக்
கருவியாற் போற்றிச்செயின்"

என்பது வள்ளுவர் வாய்மொழி.

முற்றும்

(இப்பொழுதிருக்கும் செய்திக்கட்டுப்பாடு காரணமாக பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் சமற் கண்ட பேச்சுத் தொடரில் சில பகுதிகளை நீக்கிவிடவும் சொற்களை மாற்றிவிடவும் அவசியமேற்பட்டதென்பதை நமது வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். ஆர்)

## சோசலிசம் தமிழர்களுக்கு புதிய தத்துவம் அல்ல!

"பொருளாதாரம் பரவலாக்கப்படுவதற்குப் பெயரே சோசலிசம். தமிழ் ஈழ மக்களைப் பொறுத்தவரை அவர்களது சமுதாய அமைப்பேபரவலாக்கப்பட்டபொருளாதாரத்தின் அடிப்படையிலேயே—அதாவது சோசலிச அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது. சிங்கள நாட்டில் இருப்பதுபோன்ற நிலப்பிரபுக்கள், செல்வந்தர்கள் தமிழ் ஈழத்தில் கிடையாது. செல்வம் ஒரே இடத்தில் குவித்துவைக்கப்படவும இல்லை. உதாரணமாக நிலத்தை பகிர்ந்தளிக்கும் நோக்குடன்; அரசாங்கம் நிலஉச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்தது—இதை நாம் வரவேற்றோம். நிலத்துக்கு மட்டுமல்ல—செல்வத்துக்கும உச்சவரம்பு வேண்டுமென்றோம். இந்த நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் 50 ஏக்கருக்குமேல் உள்ள காணிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன. இச்சட்டத்தின்படி, சிங்கள நாட்டில் ஐந்து இலட்சத்து எண்பதினாயிரம் எக்கர் மேலதிகக் காணி சுவீகரிக்கப்பட்டது, தமிழ் ஈழத்திலோ ஆக, 8000 ஏக்கர் மேலதிக காணியை மட்டுமே மேலதிகமாக சுவீகரிக்கமுடிந்தது. 30 பேர் மட்டுமே இதனால் பாதிக்கப்பட்டனர். எனவே சோசலிசம் எமக்குப் புதிதல்ல. சோசலிச அடிப்படையிலேயே நாம் உருவாக்கப்போகும் தமிழ் ஈழம் அமையும்."

—சங்குவேலி காந்திஜி இளைஞர் முன்னேற்ற மன்ற நூல் நிலையத் திறப்பு விழாவில் வி. தர்மலிங்கம் பா.உ. பேசியது.

## தமிழ பிரச்....

—3-ம் பக்கத் தொடர்

களில் சிங்களம் மட்டும் ஒருமைப்படுத்தும் மொழியாக இருக்குமென்று வாக்குறுதியளித்தீர்கள். இருமொழியையும எக்காலத்துக்கும் பொதுவாக ஆட்சிமொழியாக்க நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை முற்றாக மறுதலிப்பதாகும்.

நாம் சிங்களம் மட்டும் சட்டத்தின் ஒரு தொடரையோ, சொல்லையோ எழுத்தையோ, காற் புள்ளியையோ (கம்மா) கூட மாற்றப் போவதில்லை என்பது உறுதியானது. சிங்களம் மட்டும் சட்டம் மாற்றப்படாது.

நாம் ஒரே மொழி ஆட்சி மொழியாவதையே நம்புகிறோம் இந்த மரபு நிலை நிறுத்தப்படவேண்டும் என நம்புகிறோம்.

### ஒற்றுமையா? பிரிவினையா?

ஆங்கிலத்திலிருந்து சிங்க [illegible] தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே நல்லெண்ணம் வேண்டும். நல்லெண்ணம் இருக்கவேண்டும்; ஏற்படுத்தப்படவேண்டும். திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்கோரும் சமஅந்தஸ்தும் அல்லது திரு. செல்வநாயகம் கோரும் இணைப்பாட்சியும் இதற்கு அரசியல் ரீதியாகத் தடையாக உள்ளது. இவ்விரு பகுதியினரும் தமிழை வட, கிழ் மாகாணங்களில் நிரந்தர ஆட்சி மொழியாக்க விரும்புகின்றனர். அவர்கள் அதை ஒற்றுமை என்கின்றனர்; நாம் பிரிவினை எண்கின்றோம்.

அவர்கள் வட, கிழக்கு மாகாணங்களில் எல்லாக் காலங்களுக்கும் நிலைக்கக் கூடியதாகத் தமிழை ஆட்சி மொழியாகப் பிரதிட்டை செய்யவிரும்புகின்றனர். எதிர்காலத்திற் கூடத்தமது குழந்தைகள் சிங்களம் படிப்பதை அவர்கள் விரும்பவில்லை. வட, கிழக்கில் தமிழ் எப்போதும் ஆட்சிமொழியாகநிலைக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஸ்ரீ. ல. சு. க. இந்தக் கருத்தை ஒரு போதும் ஆதரிக்காது என்பதை நான் அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன்.

"எமது அமைச்சர்கள் (ஸ்ரீ. ல. சு. க) இலங்கை முழுவதும் ஒரு மொழி, ஒரு நாடு என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே திட்டவட்டமாக வேலை செய்தனர் அதுவே, அப்போது எமது நம்பிக்கை; இப்போதும் அதுவே எமது நம்பிக்கை.

தமிழரசு, தமிழ்க் காங்கிரசு என்பவற்றின் ஆதரவை இந்த இலட்சியத்துக்காக நீங்கள் (யூ. என். பி. 1965) பெற்றுக்கொண்டால் நாம் உங்களை ஆதரிக்க ஆயத்தம். ஆனால், தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளையும் வட, கிழக்கின் நிரந்தர ஆட்சிமொழியாக்க நீங்கள் முயன்றால் நாம் அதனை எதிர்ப்போம், நாம் அந்த இணக்கத்தை (தமிழ்மொழி விசேட விதி 1966) ஏற்க மாட்டோம். நாம் மீண்டும் ஆட்சிக்கு வரும்போது உங்கள் ஏற்பாடுகளைத் தூக்கி ஏறிந்து விடுவோம். நான் தீர்க்க தரிசியல்ல; நடக்கப்போவதைக் கூறுகிறேன்."

(தொகுப்பு: காங்கேசன்)

## சணல் விதை இலவசம்

சணல் விதைக்க விரும்பும் விவசாயிகளுக்கு இலவசமாக அதனைக்கொடுத்துதவ மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம் முன்வந்துள்ளது. ஒருவருக்கு 1/2 இரு. வீதம் சணல் விதை வழங்கப்படும் தேவையான விவசாயிகள் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணியின் வரலாற்றில்

# புதிய திருப்பங்களை ஏற்படுத்தப்போகிறது

# வட்டுக்கோட்டை மாநாடு!

எதிர்வரும் மே 14, 15ம் நாட்களில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் தேசிய மாநாடு தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்தவரை வரலாற்றுத் திருப்பங்கள் பலவற்றிற்கு வழி கோலப்போவது திண்ணம்.

தமிழ்ப் பேசும் கட்சிகளிடையே ஏற்பட்ட ஒற்றுமை, கட்சிகளது ஆதரவாளர் அனுதாபிகளூடாகத் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் இன்று இணைத்து நிற்கின்றது. தேர்தல் காலத்தில் தொகுதிகளைப் பங்கு போடவும், போட்டி இலலாது தேர்தலைத் தவிர்த்து ஏகமனதாக நாடாளுமன்றத்துக்குச் செல்லும் படிக்கட்டாகவும் யாரும் தமிழர் கூட்டணியை கருதக்கூடாது அப்படிக் கருதுவோர் யாராவது இருப்பின் இறுதியில் அவர்கள் ஏமாறப் போவது திண்ணம். தமிழர் கூட்டணி ஒரு தேர்தல் இயந்திரம் அல்ல அது தமிழ் மக்களின் விடுதலை இயக்கம்.

தமிழர் கூட்டணியால் எனக்கு என்ன ஆதாயம் என்று கேட்போருக்கு அதில் இடம் இல்லை. தமிழர் கூட்டணி மூலம் தமிழ் மக்களின் விடுதலையைப் பெற இழந்த உரிமையை மீட்டுப்பெற என்னை நான் எந்த அளவு அர்ப்பணிக்க ஆயத்தமாக— ஆவலாகவுள்ளேன் என்று தமிழர் கூட்டணி ஆதரவாளர், அனுதாபிகள் மட்டுமல்ல அதன் தலைவர்களே தம்மை ஆத்மசுத்தி செய்து கொள்ள வேண்டிய கால கட்டத்தில் இன்று நாம் நிற்கிறோம்.

தமிழர் கூட்டணி ஆரம்பிக்கவிருக்கும் போராட்டங்களில் பலர் தம்மைப் பலி கொடுக்கலாம், அநேகர் சிறைகளின் கொடுமைகளால் வதைப்பட்டு நசிந்து மடியலாம். இழப்புக்கள் பல்வேறு உருவத்தில் எதிர் நோக்கலாம். வாய்மை பொய்த்ததில்லை நேர்மை செத்ததில்லை. விடுதலையும் அதுபோல் எமக்குக் கிடைக்கலாம். அப்போதும் விடுதலையால் எய்தும் பயன் தனிப்பட்டவர்களைச் சென்றடையாமல் முழு இனத்தையும் பொதுவாகச் சேர இப்போதே திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அவ்வகையில் வட்டுக்கோட்டை சிறப்பு மாநாட்டின் பணி புனிதமானது.

### இங்கிலாந்து மக்கள் காட்டிய உதாரணம்

கடந்த இரண்டாவது உலகப் பெரும் போரின் போது இங்கிலாந்து கிட்லரின் ஜெர்மனியிடம் சரணடையாது தப்பிப் பிழைத்தமைக்கும், இறுதியில் அனைத்துலக நாடுகளுக்குமே ஜனநாயகத்தைக் காப்பாற்றிக் கொடுத்தமைக்கும் சர் வின்ஸ்ரன்ற் சேர்ச்சிலே காரணமாவார். அவரது வீரத்துக்கு அவர் மறைவின் பின்னரும் இங்கிலாந்து நாடு தலைவணங்குகிறது.

இங்கிலாந்து தேசத்தை இரு உலகப் போர்களில் வெல்ல வைத்த பெருமகன் சேர்ச்சில். இருந்தும் இரண்டாம் உலகப் போரை அடுத்து வந்த முதல் பொதுத் தேர்தலில் அவர் மண் கவ்வினார். அவர் சார்ந்திருந்த கன்சர்வேட்டிவ் கட்சியால், ஐரோப்பாவில் விஸ்வரூபமெடுத்து வியாபித்து வந்த பொதுவுடமையாட்சிக்குத் தாக்குப் பிடிக்க முடியா தென்பதாலேயே பிரித்தானிய மக்கள் அவரையும் அவரது கட்சியையும் நிராகரித்தனர்.

தொழில் கட்சி ஒன்றுல் மட்டுமே பிரித்தானியர் மதிப்பு வைத்துப் பேணி வந்த பாராளுமன்ற ஜனநாயகத்தைத் தொடரச் கூடுமென்ற கால கட்டம் அவர்களை அப்படிச் செய்ய வைத்தது. அதனல் ஐரோப்பிய நாடுகளுள் தலை சிறந்த பாராளுமன்ற ஜனநாயகத்தை பிரித்தானியா காப்பாற்றிக் கொண்டது.

### கொள்கையை வகுக்க உதவட்டும்!

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது மகாத்மா காந்தி பதவி ஏற்க மறுத்தார். தேசிய விடுதலை இயக்கமான இந்தியக் காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டுமென்றும் விரும்பினார். அவரது வழியை வின்சற் சேர்ச்சிலும், வங்கபந்து முஜிபுர் றகுமானும் பின்பற்றி இருப்பரேல் அவர்களுக்குப் பின் நேர்ந்த தோல்வியும் படுகொலையும் முறையே சம்பவித்திரா: இந்திய காங்கிரசும் கலைக்கப்பட்டிருப்பின் இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் அதன் புகழ் என்றென்றும் மங்காது பாதுகாக்கப்பட்டிருக்கும். மக்கள் தலைவர்களும், மக்கள் இயக்கங்களும் மக்கள் மனப் போக்கை முன்னுணர்ந்து செயல்படவேண்டும். ஏனைய நாடுகளதும் தலைவர்களதும் வரலாறு அதற்கு உதவவேண்டும். இவ் அனுபவங்கள் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் கூட்டணியின் கொள்கையை வகுப்பதில் தலைவர்களுக்கு உதவுமென்பது திண்ணம்.

### இஸ்லாமிய—தமிழர் உறவு

தமிழ்ப் பேசும் மக்களின் ஓர் அங்கமான இஸ்லாமிய மக்களிடையே இன்று ஏற்பட்டுவரும் இனவுணர்ச்சியும் விழிப்பும் தமிழர் கூட்டணியின் போராட்டப் பாதையில் மற்றுமோர் திருப்புமுனையாகும். சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்து அல்லது விடுதலைசெய் என்று இஸ்லாமியர் ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதும், புத்தளத்தில் நேரிட்ட நிகழ்ச்சிகளை ஆராயப் பகிரங்க விசாரணைக் குழு நியமிக்கப் படவேண்டுமென்ற மூதறிஞர் செல்வாவின் அறைகூவலும் தமிழர் இஸ்லாமியர் இணைப்பை மென்மேலும் வலுப்படுத்துகின்றன. தமிழ், இஸ்லாமிய மக்களின் தாய்மொழி தமிழ். ஆகவே அவர்களது பூமியில் சிங்களம் நீதிமன்றமொழியாவதை ஆட்சேபிக்க ஏற்படுத்தப்பட்ட தமிழர் இஸ்லாமியர் ஒற்றுமை முன்னணி தமிழர் இஸ்லாமியரது தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களையும் எதிர்ப்பதற்கு ஒன்றுபட்டுழைக்க முன்வந்துள்ளது. மூதறிஞர் செல்வாவின் பிறந்த தின வைபவத்தில் முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் கலீல் தமது துணைவியார் சகிதம் கலந்து வாழ்த்துரையும் வழங்கியுள்ளார். தமிழர் இஸ்லாமியர் ஒறறுமையைத் தடுப்பதற்காகப் போலும் தந்தையின்பிறந்த நாள் செய்தியை வெளியிட்ட தேசிய தினசரிகள் டாக்டர் கலீல் வைபவத்தில் பங்குகொண்டதை இருட்டடிப்புச் செய்துள்ளன.

# இஸ்லாமியர் - தமிழர் இணைப்புக்கு

# இதயக் கதவுகள் மேலும் திறக்கட்டும்!

### ஆட்சியாளர் அச்சம்

அவர்கள் அப்படிப் பயப்பட நியாயமான காரணங்கள் உண்டு. தமிழனுக்காக வாதாட உலகில் எந்த நாடும் இடையாது. முன் பதவியில் இருந்த தமிழக அரசும் இந்தியப் பேரரசின் மாகாண அரசே. இருந்தும் அதற்கே பயப்பட்டு மாகாண அரசுக்கும் யூனியன் அரசுக்கும் இடையே சிண்டு முடித்து பகைமுடித்தவர்களாயிற்றே!

உலகில் இருபதுக்கு மேற்பட்ட இஸ்லாமிய நாடுகள் உண்டு. இஸ்லாமியர் தமிழர் உறவு நெருக்கமடையுமானல் தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலைக் குரல் உலக முஸ்லீம்களின் பெரும் தாக்கத்தை உண்டாக்கும். ஆகவே தமிழர் உறவு தவிர்க்கப்படவேண்டும்; முளையிலேயே கிள்ளப்படவேண்டுமென்பதில் சிங்களக் கட்சிகள் யாவும் முனைப்பாகவுள்ளன.

அரசாங்கக்கட்சிகள் அண்மையில் யாழ். நகரில் நடத்திய மேதின ஊர்வலத்துக்கு ஆள் சேர வேண்டுமென்பதற்காக ஊர்வலப் பாதையை மூஸ்லிம் வட்டாரங்களுக்கூடாக நடத்தினார்கள்; இஸ்லாமிய மக்களோ ஊர்வலத்தில் மட்டுமன்றி அரசாங்க ஆதரவு மேதினக் கூட்டத்திலுமே தலைகாட்டவில்லை. அனேக இஸ்லாமிய மக்கள் மொழிவழித் தொழிற்சங்க மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டது தமிழர் இஸ்லாமியர் ஒற்றுமைக்குக் கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும். ஆகவே, இஸ்லாமியர் தமிழர் ஒற்றுமைக்கு உலைவைக்கும் எத்தனங்கள் பல திரைமறைவில் மேற்கொள்ளப்படலாம். தமிழ் மக்களும், இஸ்லாமிய மக்களும் விழிப்புடன் இருந்து மேற்படி சதிகளை முறியடிக்கவேண்டும்.

இஸ்லாமியர் தமிழர் ஒற்றுமை ஓங்கினல் உலக நாடுகள் பல அளர்களுக்காகக் குரல்கொடுக்கலாம். குழி உண்டு நரிக்கு; கூடு உண்டு பட்சிக்கு; தமிழ்ப்பேசும் மக்களுக்கோ தலைசாய்க்கத் தாயகம் கிடையாது என்ற நிலை விரைவில் மறைந்துவிடும்!

### விழாக்கோலம் பூணட்டும்

வரலாற்றுத் திருப்பங்கள் பலவற்றுடன் பின்னிப் பிணைந்ததாக எதிர்வரும் தமிழர் கூட்டணியின்சிறப்பு மாநாட்டைத்தமிழ்ப்பேசும் மக்கள் சற்றுத் தடபுடலாகவே நடத்த முற்படுவது புரிந்துகொள்ளக் கூடியதே! மூதறிஞர் செல்வாவின் பிறந்த நாள் பெருநாளின் போது வவுனியா நகரம் விழாக்கோலம் காட்டிற்று. எங்கும் நாதஸ்வர இசை; பார்த்தவிடமெல்லாம் நீக்கமற உதயசூரியன் கொடிகள் மகரதோரணங்கள், அலங்கார சோடினைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைமே அது பிரதிபலித்தது. இவை இரண்டையுமே மிஞ்சும் வகையில் தமிழர் கூட்டணி சிறப்பு மாநாட்டு அலங்காரங்களை, வரவேற்பு வளைவுகள், அமையவேண்டும்.

சங்கானையில் மாநாட்டையொட்டி தேநீர் கடைகளில் பால் தேநீர் பத்துச் சதத்துக்கு விற்கப்படுமென்று ஓர் செய்தி எட்டியுள்ளது; ஏனைய வர்த்தகர்களுக்கும் இது ஓர் முன்னேடியாக அமையட்டும். வர்த்தகம் மாநாட்டு நாட்களில் ஆதாயத்துக்காகவன்றி சேவையாகவே மலரட்டும். விருந்தினருக்கு உண்டியும் உறையுளும் அளிக்க தாபனங்கள் பலமுன்வந்துள்ளன. உதயசூரியன் கொடிகள், சின்னங்கள் சுவரொட்டிகள் சால்வைகளுக்கு தட்டுப்பாடு வரலாம். பெறவிரும்புவோர் தொடர்புகொள்க நிர்வாகி, 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

—திரவியம்

### மாநாட்டுச் செயலாளர் வேண்டுகோள்!

வட்டுக்கோட்டைத் தொகுதியில் 14, 15ம் நாட்களில் நடைபெறும் தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலை உடனடியாக கூட்டணி செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி உதவுமாறும், இது இறுதி ஒழுங்குகளை பூர்த்தி செய்ய உதவியாக இருக்குமென்றும் — சகல தமிழர் கூட்டணி மாவட்டக்கிளைகளையும், இளைஞர் பேரவை, மகளிர் பேரவைக் கிளைகளையும் மாநாட்டு வரவேற்பு குழுவின் இணைச்செயலாளர் திரு. இ. த. விக்னராசா கேட்டுக்கொள்கிறார்.

### மாநாட்டுப் பொருளாளர் வேண்டுகோள்!

தமிழர் கூட்டணியின் தேசிய மாநாட்டுக்கான நிதிக்குழு தெரிவுசெய்யப்பட்டு இயங்கிவருவதாகவும், இத்தகுழுவிடம் நேரடியாக நிதிசெலுத்த வசதியில்லாதவர்களை அ. அமிர்தலிங்கம், செயலாளர்நாயகம், தமிழர் கூட்டணி, மூளாய், சுழிபுரம் எனும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு மாநாட்டுப் பொருளாளர் திரு. கே. எஸ். வேலுப்பிள்ளை கோருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பு: நல்ல காலம் வருகுது. நல்ல காலம் வருகுது.

தம்பு: யோவ் என்னையா குடுகுடுப்பைக்காரன் மாதிரி சாத்திரம் சொல்லிக் கொண்டு வருகிறீர்......

சுப்பு: பின்னே நல்லது நடந்து கொண்டிருந்தால் நல்லதைத்தானே சொல்ல வேணும்......

தம்பு: அப்படி என்ன தான் நல்லது வந்திட்டு......

சுப்பு: இன்னும்என்னய்யா நல்லது வரவேணும்......இது வரையில் மௌனமாக இருந்த நம்ம இஸ்லாமிய சகோதரர்கள் எங்களுக்காகவும் குரல் கொடுக்கத் துவங்கி இருக்கிறாங்களே.

தம்பு: விளக்கமாய் சொல்லு விஷயத்தை.

சுப்பு: அகில இலங்கை முஸ்லிம் ஆசிரியர் சங்கம் சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்களை விசாரணைக்குக் கொண்டு வரச்சொல்லி அம்மாவுக்கும் ஆட்சிக்கும் மனுச் செய்யத்தீர்மானம் எடுத்திருக்குது தெரியுமோ?

தம்பு: நல்ல சேதிதான் இப்போ என்றாலும் இஸ்லாமியரும் தமிழர்கள்தான் என்ற இன உணர்வு உண்டாகுதே......

சுப்பு: இது மட்டுமில்லே வவுனியாவில் நடந்த பெரியவரின் பிறந்த நாள் கூட்டத்தில் டாக்டர் கலீல் கூட "முஸ்லிம் மக்களின் மொழி தமிழ்" என்றும் "தமிழர் தலைவன் செல்வநாயகம்" என்றும் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்...... இதை விட வேற நல்ல செய்தி என்ன காணும் இருக்கு.

தம்பு: யோவ் நீரிப்பிடிச் சொல்லுறீர் ஐனுப் ஹலீம் இஷாக் கொழும்பில் ஒரு கூட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறார் பெரும்பான்மை இனத்துடன் இணைந்து வாழ்வோம் என்று சொல்லியிருக்கிறாரே.

சுப்பு: இதில எல்லாம் ஆச்சரியப்படுறதுக்கு என்ன காணும் இருக்கு, நம்மட ஆக்களுக்குள்ளேயே அருளம்பலம், தியாகராசா, குமாரசூரியர், ராஜன் செல்வநாயகம் மாதிரி குட்டு வாங்கி குட்டு வாங்கி கும்பிட்டு வயிறுவளர்க்கிற கும்பல் இருக்குத்தானே— அது மாதிரித்தான் முஸ்லிம்களுக்குள்ள இவரும் இவரப் போல சிலரும் இருக்கிறாங்க...... அதுக்கு என்ன செய்யிறது. இன்னுமொரு விஷயம் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மை இனத்தாரின் உறவை நாடினாலும்—அவர்கள் இவர்களை ஏற்றுக் கொள்ள ஆயத்தமில்லை—உனக்குத்தெரியுமா ... அம்பாந்தோட்டைக்கு சிங்களம் படித்த 250 முஸ்லிம் ஆசிரியர்களை, கல்வி அமைச்சர் அனுப்பிவைச்சபோது 'மரக்கலய அப்பிட்ட எப்பா' என்று அவர்களை திருப்பி அனுப்பிவிட்டார்கள் சிங்களவர்கள்.

சுப்பு: தமிழர்களை— "தோசவட அப்பிட்ட எப்பா" என்றவர்கள் முஸ்லிம்களை "மரக்கலய அப்பிட்ட எப்பா" என்னுகிறார்கள். ஆக நாம் இரண்டு சமூகமும் சிங்களவங்களுக்கு ஆகாதவர்களாயிற்றோம். எனவே சிறுபான்மை இனங்களாகிய நாம் இணையவேண்டும் என்கிறீர்கள்!

தம்பு: ஆமாம் "இங்குள்ள தமிழர் ஒன்றுதல் கண்டே எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்" என்ற பாரதிதாசனுடைய பாடல் ஈழத்தில் உண்மையாகிக் கொண்டுவருகுது. இந்தக் காட்சியைக் கண்டு முஸ்லிம்களை வைச்சே அரசியல் வியாபாரம் செய்யலாம் என்று நினைத்த சிங்களக் கூட்டம் என்ன செய்யிறது என்று கலங்கிக்கொண்டிருக்குது:

—அற்லஸ்

## தமிழர் கூட்ட ...

—1-ம் பக்கத் தொடர்

பிள்ளை தலைமையில் நியமிக்கப்பட்ட குழு தீவிரமாக சுடுபட்டுள்ளது. மாநாட்டுக்கு வரவிருக்கும் 300க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் தங்குமிடங்களும் அவர்களது உணவுக்கான ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப் பட்டுவிட்டன.

மாநாட்டையொட்டி வட்டுக்கோட்டைத் தொகுதி முழுவதும் எழுச்சியும், சுதந்திர உணர்வும் கரை புரண்டோடுகின்றன. மாநாட்டு சமயத்தில் வரவேற்பு வளைவுகளும், உதயசூரியன் கொடிகளும் காணுமிடமெங்கனும் நீக்கமற நிறைந்திருக்கவேண்டிய ஏற்பாடுகளை இளைஞர்கள் கவனித்து வருகின்றனர்.

பிரதிநிதிகள் மாநாடு நடைபெறவிருக்கும் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலைக்கு அனுமதி கிடைத்துவிட்டது. இளைஞர் மாநாடு, மாதர் மாநாடு, கலை நிகழ்ச்சிகள் ஆகியன இங்குள் வழக்கம்பரை அம்மன் கோவில் வீதியிலும் நடைபெறும்.

15ம் நாள் மாலை இறுதிப் பொதுக்கூட்டம் பொன்னாலைக் கடற்கரை மைதானத்தில் நடைபெறும். இதில் 50 000 க்கு மேற்பட்டோர் பங்கு கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டத்துக்கு முன்னர் ஊர்வலம் ஒன்றை நடத்தவும் அனுமதிகோரப் பட்டுள்ளது.

மாநாட்டிற் கலந்து கொள்ளவென கல்முனைப் பகுதியிலிருந்து டாக்டர் ஆ. உதுமா லெப்பை தலைமையில் 300க்கு மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்களும் வரவிருக்கிறார்கள். மலையகம் கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் மாநாட்டுச் சமயத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியை முற்றுகையிட்டிருக்கிறார்கள் என அறிய வருகிறது.


இப்பொழுது காட்சியளிக்கிறது!

செல்லமகால்

கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி, ஸ்ரீபிரியா, தேவகி மற்றும் பலர் நடித்த-

அருள்பிலிம்ஸ் அளிக்கும்
ஆண்டாள் பிலிம்சாரின்

'அவள் ஒரு தொடர் கதை'

திரைக் கதை—வசனம் டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.Sc.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

7-வது வாரம்

கெபிட்டி
றீகல் (மட்டுநகர்)

முத்துராமன் — சிவகுமார்,
ஜெயசித்ரா — விதுபாலா,
அசோகன் — மனோரமா,
தேங்காய்—சுந்தரராஜன் —நடித்த

எங்கம்மா சபதம்

டைரக்ஷன்:
எஸ். பி. முத்துராமன்

இப்பொழுது காட்சியளிக்கிறது!

கெப்பிட்டல்
பிளாசா

நடிகர் திலகம்
சிவாஜி
(இரட்டை வேடம்)

உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன் நாகேஷ், பண்டரிபாய், வி. கே. ராமசாமி, ரமா பிரபா, ராஜகோபால், ஜெய்குமாரி நடித்த—



கௌரவம்

(ஈஸ்ட்மென் கலர்)

கிங்ஸ்லி 9வது வாரம்

சிவகுமார் கமலஹாசன் ஜெயசுதா —நடித்த

மேல்நாட்டு மருமகள்
(கலர்)

லிடோ (யாழ் நகர்) 8-வது வாரம்!
ஜெய்சங்கர்— சிவகுமார் —நடித்த

எங்க பாட்டன் சொத்து கலர்

வெலிங்டன் 2-வது வாரம்
—யாழ்நகர்

சீர்காழி கோவிந்த ராஜன். டி. ஆர். மகாலிங்கம்நடித்த- அகஸ்தியர் (கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் மே மாதம் 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.